SITY, SRI LA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## புவியியற் துறை

இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக்கலைமாணித் தேர்வு - 2014/2015

(October/Nov-2016)

| | |
|---|---|
| பௌதிகப் புவியியல் : **GY: 2223**<br>**Physical Geography** | நேரம்: 3 மணித்தியாலங்கள் |

ஏவையேனும் நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக

எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

1.

i. மண்தரமிழப்பு, மண்ணரிப்பு ஆகிய பதங்களை வரையறை செய்க.

(05 புள்ளிகள்)

ii. "மண்ணரிப்பினை ஊக்குவிப்பதில் புறவிசைக் காரணிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன" இக்கூற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக.

(10 புள்ளிகள்)

iii. மட்பாதுகாப்பு முறைகளை வகைப்படுத்திக் காட்டுவதுடன் சாய்வுப் பகுதிகளுக்கு பொருத்தமாக மட்பாதுகாப்பு முறைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

2.

i. இலங்கையில் நிலச்சரிவு அனர்த்தத்தினால் இவ்வருடம் (2016) அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கிய இரண்டு மாவட்டங்களை பெயரிட்டு அங்கு நிகழ்ந்த முக்கிய பாதிப்புக்களை சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

(07 புள்ளிகள்)

ii. நிலச்சரிவு அனர்த்தத்தினால் ஏற்படக்கூடிய சமூகப் பொருளாதார தாக்கங்களை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

iii. உமது கல்விச் சுற்றுலாவில் 18 வளைவு பாதையின் வழியே நீர் அவதானித்த நிலச்சரிவு கட்டுப்பாட்டு முறைகளை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

3.

i. 'கெப்பனின்' பிரதான காலநிலை வகைகள் மற்றும் உபகாலநிலை வகைகளை எடுத்துக் காட்டுக.

(10 புள்ளிகள்)

ii. கெப்பனின் 'A' மற்றும் 'B' காலநிலை வகைகளின் முனைப்பான இயல்புகளை ஒப்பிட்டு ஆராய்க.

(15 புள்ளிகள்)

4. கரையோரச் செயன்முறைகளில் பங்களிப்பு செய்யும் பிரதான காரணிகளை சுருக்கமாக விபரித்து, அச்செயன்முறைகளால் தோற்றம் பெறும் தின்னல் மற்றும் படிதல்சார் நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விபரிக்குக.

(25 புள்ளிகள்)

5. காலநிலை மாற்றத்திற்கு அடிப்படையான காரணிகளை விபரித்து அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் காலநிலை மாற்றத்தினால் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதா பிரச்சினைகளை ஆராய்க.

(25 புள்ளிகள்

6. பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டினுக்கு** விளக்கக் குறிப்புரை வழங்குக.

i. பௌதீகப் புவியியலின் முக்கியத்துவமும் அண்மைக்கால போக்கும்

ii. கண்டநகர்வு கொள்கைக்கான ஆதாரங்கள்

iii. ஓடும் நீரின் படிதல் செயற்பாடும் நிலவுருவங்களும்

(12.5X 2=25 புள்ளிக

********************************